செ.வெ.எண். 55/மார்ச்  தேதி: 24.03.2017

**தருமபுரி மாவட்டம்**

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**








தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (24-03-2017) நடைபெற்றது.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல், வேளாண் அறிவியல் மையம், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மை விற்பனைத்துறை மூலம் விவசாயிகள் பார்வையிடும் வண்ணம் கருத்துக்கண்காட்சியை பார்வையிட்டு பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

வறட்சியின் காரணமாக உரிய ஆவணங்களுடன் முறையாக விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு விண்ணப்பத்தை பரிசீலனை செய்து தோட்டக்கலைத் துறையின் மூலம் சொட்டுநீர் பாசனம் 100 சதவீதம் மானியத்தில் அமைத்திட ஏற்பாடு செய்து தரப்படும். நமது மாவட்டத்திற்கு தாழ்த்தப்பட்ட பிரிவினரைச் சார்ந்த விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையில் ரூ. 6 கோடி செலவிடப்படாமல் உள்ளது. விவசாயிகளுக்கு சீரிய முறையில் அனைத்து வளங்களும் கிடைக்க தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. வறட்சியின் காரணமாக இந்நிதி கிணறு வெட்டவும் விவசாயகளுக்கு பயன்படுத்தப்படும் எனவும், மேலும் விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த அனைத்து பயிர்களும் செய்யலாம் எனவும், நமது மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு மற்றும் மக்களுக்கு குடிநீர் தேவைக்காக மொரப்பூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரத்தில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விரைவு நடவடிக்கையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு காவல்துறையின் அனுமதி தேவையில்லை. பொதுப்பணித்துறையின் அனுமதி கடிதம் பெற்றிருந்தால் மட்டும் போதுமானது.

கால்நடைகளுக்கு உலர் தீவனக் கிடங்குகள் 12 மையத்திலிருந்து 24-ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், கால்நடைகளுக்கான தீவனம் 200 மெட்ரிக் டன் வரையில் மானியத்தில் வழங்கப்படும். கால்நடைத் தீவனம் மானிய விலையில் ஒரு கிலோ 2 ரூபாய் விலையில் விற்பனை செய்யப்படும் எனவும், நமது மாவட்டத்தில் கால்நடைகளுக்கான காப்பீடு குறித்து கையேடு மூலம் விளக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் விவசாயிகளின் கால்நடைகளுக்கான காப்பீடு பிரிமியம் செலுத்துவது மற்றும் நிறைவு பெறுவது குறித்த தகவல் கைபேசி எண் மூலம் தெரிவிக்க வேண்டும் எனவும், நமது மாவட்டத்தில் விடுபட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) (ம) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திருமதி ரா.ரா. சுசீலா, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திரு. லோகநாதன், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் (பொ) திரு. பாண்டியன், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை (தனி அலுவலர்) திருமதி. துர்க்கா மூர்த்தி, அரூர் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை (தனி அலுவலர்) திருமதி கவிதா, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) திரு. சேனாபதி, வேளாண்மைத்துறை அலுவலர்கள், சகோதரத்துறை அலுவலர்கள், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் விவசாய சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.